18.09.2024

S.C.No. 21/2024

PW. 16 Tr. திரு. திருமுருகன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

சம்பவம் சம்பந்தமாக எனக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் இரவு 10.45 மணிக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் நான் விசாரணையை எத்தனை மணிக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 10.50 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் ஜெயராஜிடமிருந்து பெற்றுக் கொண்டு விசாரணையை தொடங்கினேன். விசாரணையை எந்த இடத்திலிருந்து தொடங்கினேன் என்றால் காவல் நிலையத்தின் முன்பிருந்து முதல் தகவல் அறிக்கையை பெற்றுக் கொண்டு சம்பவ இடத்திற்கு சென்று 23.00 மணிக்கு விசாரணையை தொடங்கினேன். அப்போது சம்பவ இடத்திற்கு என்னுடன் யாா் வந்தாா்கள் என்றால் இரண்டு காவலா்கள் என்னுடன் வந்தாா்கள். முதல் தகவல் அறிக்கையை பெற்றுக் கொண்டு அதை அப்படியே நம்பி காயம் பட்ட நபரையோ, அவரை சாா்ந்தவா்களையோ யாரையும் விசாாிக்காமல் நேரடியாமல் சம்பவ இடம் சென்று விசாரணையை தொடங்கினேனாஎன்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு நான் செல்லும் போது சம்பவ இடத்தில் சாட்சிகள் நாகராஜன், ராஜா மற்றும் சம்பவத்தை

பார்த்த சாட்சிகளும் இருந்தார்கள். நான் அங்கே செல்லும்போது அங்கே அவர்கள் இருந்தார்களா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் இருந்ததாக நான் சொல்லும் சாட்சிகள் நாகராஜன், ராஜா ஆகியோர் நண்பர்கள் என்பது எனது புலன் விசாரணையில் துலங்கியதா என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது அ.சா. 2 கிஷோர், மற்றும் அ.சா.3 அரவிந்த் ஆகியோர் அங்கே இருந்தார்களா என்றால் ஆமாம். அ.சா.ஆ. 2 பார்வை மகஜரை நான் சம்பவ இடத்தில் வைத்துதான் தயார் செய்தேனா என்றால் ஆமாம். அ.சா.ஆ. 3 அத்தாட்சியையும் சம்பவ இடத்தில் வைத்துதான் தயார் செய்தேனா என்றால் ஆமாம். அ.சா.ஆ. 17 வரைபடமும் சம்பவ இடத்தில் வைத்துதான் தயார் செய்தேனா என்றால் ஆமாம். இந்த ஆவணங்களை தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 45 நிமிடங்கள் இருக்கும். சம்பவ இடத்தில் சாட்சிகளை எவ்வளவு நேரம் விசாரித்தேன் என்றால் சுமார் 1 மணி 45 நிமிடம் விசாரித்திருப்பேன். அ.சா.ஆ. 2, 3 மற்றும் 17 ஆவணங்களில் உள்ள எழுதப்பட்ட விவரங்கள் என்னால் எழுதப்பட்டவை என்றால் சரிதான். அ.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்களில் கையொப்பம் இட்டுள்ள இரண்டு சாட்சிகளும் என் முன்னர் வைத்துதான் கையொப்பம் செய்தார்களா என்றால் ஆமாம். பார்வை மகஜரில் உள்ள கையொப்பங்களும், அ.சா.ஆ. 3 அத்தாட்சியில் உள்ள கையொப்பங்களும் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து அவர்கள் தான் கையொப்பம் செய்தார்கள் என கூறுகிறார். ஆவணங்களை நான் தயார் செய்த போது பக்கத்தில் வீடுகளோ, கடைகளோ திறந்திருக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றிய

செருப்புகளையும், அந்த இடத்தையும் அப்போது என் செல்போனில் புகைப்படம் எடுத்தேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு நான் இறந்து போன உடலையும், உறவினர்களையும் விசாரித்தேன் என்றால் அதிகாலை 2.00 மணிக்கு சத்தியம் மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். சத்தியம் மருத்துவமனையில் வைத்து விசாரிக்கும்போது அவர்கள் நடந்ததாக சொல்லிய விசயத்தை அப்படியே நான் நம்பி விட்டேன் என்றால் அவர்களை நான் அங்கு வைத்து விசாாிக்கவில்லை. ராஜகோபாலையும் அங்கு வைத்து நான் விசாாிக்கவில்லையா என்றால் அவரை சம்பவ இடத்தில் வைத்து விசாாித்துவிட்டேன். ராஜகோபாலை விசாாித்து அவா் சொன்ன விவரத்தை சத்தியம் மருத்துவமனையில் இருந்த சிசிடிவி கேமராவில் இருந்த பதிவுகளை பாா்த்து தொிந்துகொண்டேன் என்றால் சத்தியம் மருத்துவமனைக்கும், சம்பவ இடத்திற்கும் சம்பந்தம் இல்லை. சம்பவ இட கண்ணுற்ற சாட்சிகளை வைத்து விசாாித்து தொிந்துகொண்டேன். காயம் பட்ட நபா்களை யாா் எப்போது சத்தியம் மருத்துவமனைக்கு அழைத்து வந்தாா்கள் என்பதை சிசிடிவி கேமராவை பாா்த்து விசாாித்து தொிந்து கொண்டேனா என்றால் இல்லை ராஜகோபால், இறந்து போன மனோஜின் நண்பா் அஜய் என்பவா்கள் இரு சக்கர வாகனத்தில்அழைத்துச் சென்றதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளாா்கள். சத்தியம் மருத்துவமனையில் சுமாா் எவ்வளவு நேரம் பிரேத விசாரணை மேற்கொண்டேன் என்றால் அதிகாலை 2.00 மணியிலிருந்து 3.30 வரை மேற்கொண்டேன். பிரேத விசாரணையின் போது இறந்து போன மனோஜ் அணிந்திருந்த ஆடைகளை அங்கு வைத்துதான் கைப்பற்றினேனா என்றால் ஆமாம். அதை யாா் முன்னிலையில்

கைப்பற்றினேன் என்றால் சாட்சிகள் முருகன் மற்றும் வினு ஆகியோா் முன்னிலையில் கைப்பற்றினேன். நான் கைப்பற்றியதாக சொன்னஆடைகளின் நிறத்தை சொல்ல முடியுமா என்றால் இரத்தக் கறை படிந்த கருப்பு நிற ஜீன்ஸ் பேண்ட் ஒன்றும், இரத்தக் கறை படிந்த நீல நிறத்தில் கருப்புக் கட்டம் போட்ட சட்டை ஒன்று ஆகியவற்றை கைப்பற்றினேன். இறந்து போன மனோஜின் ஆடைகளில் இருந்த இரத்தம் ராஜகோபால் மற்றும் அஜய் ஆகியோாின் உடைகளில் இருந்ததா என்ற விவரம் எனது புலன் விசாரணையில் துலங்கியதா என்றால் அவா்களின் உடைகளில் இரத்தம் இல்லை. இறந்து போன மனோஜ் சத்தியம் மருத்துவமனைக்கு ராஜகோபால் மற்றும் அஜய் கொண்டு வந்தாா்கள் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் அஜய்யின் இரு சக்கர வாகனத்தில் கொண்டு வந்தாா்கள் என துலங்கியது. இரு சக்கர வாகனத்தில் மனோஜ் ஐ கொண்டு வரும்போது அவருக்கு உடைகளில் இரத்தம் இருந்ததா அல்லது மருத்துவமனைக்கு வந்த பிறகுதான் மனோஜிற்கு உடலில் இருந்து இரத்தம் வந்ததா என்பதை மருத்துவாிடம் விசாாித்து தொிந்துக் கொண்டேனா என்றால் அவருக்கு முதலுதவி சிகிச்சை மட்டும்தான் கொடுத்திருந்தாா்கள் அதனால் அதை பற்றி நான் விசாாிக்கவில்லை. பிரேத விசாரணை முடிந்து எத்தனை மணிக்கு ஆசாாிபள்ளம் மருத்துவமனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்ே தன் என்றால் அதிகாலை 4.00 மணிக்கு அனுப்பி வைத்தேன். பிரேத விசாரணையின் போது சத்தியம் மருத்துவமனையில் வைத்து விசாரணையையும் பிரேதத்தையும் அந்த உடைகளையும் என்னுடைய செல்போனில் புகைப்படம் எடுத்தேனா என்றால் ஆடைகளை மட்டும் புகைப்படம் எடுத்தேன். இந்த

வழக்கின் சாட்சிகளான கிஷோரையும், அரவிந்த்யும் எந்த நாள், எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் 29.08.2023 அன்று நள்ளிரவு 12.15 மணி முதல் 01.15 வரை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். இந்த இரண்டு பேரையும் சம்பவ இடத்தில் வைத்து விசாரணை முடித்து அவா்களை எங்கு அனுப்பி வைத்தேன் என்றால் நான் எங்கும் அனுப்பவில்லை. அந்த இரண்டு பேரையும் நான் வடசோி காவல் நிலையத்தில் 29.08.2023 காலை 8.00 மணி வரை சட்ட விரோத காவலில் வைக்கவில்லையா என்றால் வைக்கவில்லை. எத்தனை மணிக்கு எதிாியை கைப்பற்றினேன் என்றால் 29.08.2023 அன்று காலை 8.00 மணியளவில் கைது செய்தேன். எந்த இடத்தில் வைத்து கைது செய்தேன் என்றால் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளம் பஸ்ஸ்டாப்பிலிருந்து கைது செய்தேன். எதிாியை கைது செய்வதற்காக எத்தனை மணிக்கு வடசோியிலிருந்து சாத்தன்குளத்திற்கு கிளம்பிச் சென்றேன் என்றால் அதிகாலை 4.00 மணிக்கு கிளம்பிச் சென்றேன். சாத்தான்குளத்தில் வைத்து கைது செய்யும்போது எதிாிக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தையும் அங்கு வைத்து கைப்பற்றினேன் என்றால் சாிதான். சாத்தான்குளத்தில் வைத்து எதிாியின் வாகனத்தை கைப்பற்றும்போது அத்தாட்சி எதுவும் தயாா் செய்யவில்லை என்றால் சரிதான். வாகனம் வழக்கு சொத்து என்று தொியாது அதனால் அத்தாட்சி தயாா் செய்யவில்லை. அந்த வாகனத்தை சாத்தான்குளத்திலிருந்து வடசோி காவல் நிலையத்திற்கு எப்படி கொண்டு வந்தேன் என்றால் ஒரு காவலா் மூலம் கொண்டு வந்தேன். அந்த காவலாின் பெயா் எனது புலன் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. எத்தனை மணிக்கு இந்த

வாகனத்தை அத்தாட்சி தயாா் செய்து கைப்பற்றினேன் என்றால் எதிாியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்ற பின்பு காலை 11.30 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினேன். சாத்தான்குளத்திலிருந்து வடசோி காவல் நிலையத்திற்கு வாகனத்தை கொண்டு வந்த காவலாின் பெயா் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. இரு சக்கர வாகனத்தை கைப்பற்றும்போதும் எனது செல்போனில் அதை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. அத்தாட்சியில் சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லும் ஸ்கூருடிரைவரையும், கத்தியையும் கைப்பற்றும்போது எனது செல்போனில் புகைப்படம் எடுத்தேனா என்றால் எடுத்தேன். இறந்து போன மனோஜின் செல்போனை புலன் விசாரணையின் போது கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று இறந்து போன மனோஜ் அவருடைய செல்போனில் யாா் யாாிடம் பேசியிருந்தாா் என்பதை விசாாித்து தொிந்து கொள்ளவில்லை என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை அதனால் அதை விசாாிக்கவில்லை. ராஜகோபலும் இறந்து போன மனோஜ்ம் சோ்ந்து சம்பவ இடத்திற்கு வந்தாா்களா இல்லை தனித்தனியாக வந்தாா்களா என்பது எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. எஸ்.எஸ்.டி. பாத்திரக்கடை இரவு 8.00 மணிகசு அடைத்து விட்டாா்கள் என்பது எனது புலன் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். நான் கைப்பற்றியதாக சொல்லக்கூடிய கத்தியில் இருந்த இரத்தக்கறை மனோஜ் உடைய இரத்தக்கறை ஒத்துப் போகவில்லை என்பது எனது விசாரணையில் தொியும் என்றால் அந்த கத்தியில் இருந்த ரத்தம் என்ன வகை என அறியமுடியவில்லை எனதான் அறிக்கை வந்தது. அதனால் மனோஜின் இரத்த

வகையும் கத்தியில் இருந்த ரத்த வகையும் ஒன்றுதானா என அறியமுடியவில்லை. சம்பவ நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திலிருந்து இரத்தக் கறை படிந்த மண்ணோ அல்லது இரத்தக் கறை படியாத மண்ணோ கைப்பற்றவில்லை என்றால் அப்போது மழை தூரல் இருந்து கொண்டிருந்தது. அதனால் இரத்தக் கறை எதுவும் தென்படவில்லை. அதனால் கைப்பற்றவில்லை. அந்த மழை தரை நனையும் அளவிற்கு இருந்ததா அல்லது தண்ணீர் ஓடும் அளவிற்கு இருந்ததா என்றால் ஓடும் அளவிற்கு இருந்தது. அந்த மழையில் தான் வரைபடம் வரைந்தேனா என்றால் ஆமாம். நான் வரைபடம் வரைந்த இடத்தில் மழை இல்லையா என்றால் ஆமாம், தூறல் மட்டும் இருந்தது. பிரேத விசாரணையின் போது மனோஜ் அணிந்திருந்ததாக சொல்லக்கூடிய ஆடைகளை அத்தாட்சியின் மூலம் கைப்பற்றி இந்த நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேனா என்றால் ஆமாம். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் வைத்து பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரேத விசாரணையின் அறிக்கையில் மனோஜ் என்ன நிற ஆடை அணிந்திருந்ததாக கூறியுள்ளேன் என்றால் இரத்தக் கறையுடன் கூடிய சாம்பல் கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, சாம்பல் நிற கருப்புக் கலர் கட்டம் போட்ட சட்டை ஒன்று என குறிப்பிட்டுள்ளேன். இந்த இரண்டு பொருட்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவற்றைதான் ஆஜர் செய்தேன். அத்தாட்சி தயார் செய்யாமல் ஆஜர் செய்தேனா என்றால் இல்லை அத்தாட்சி மூலம் தான் தயார் செய்தேன். அந்த அத்தாட்சியை எந்த சாட்சிகள் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன் என்றால் பிரேத விசாரணை

அறிக்கையில் சாம்பல் கலர் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ. 4 அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ளவாறு உள்ள உடைகளைதான் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜா் செய்தேன். அ.சா.ஆ. 4 அத்தாட்சியில் யாரெல்லாம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளாா்கள் என்றால் முருகன் மற்றும் வினு கையொப்பம் செய்தாா்கள். முருகனையும், வினுவையும் விசாாித்தேனா என்றால் விசாாித்தேன். அவா்கள் விசாாிக்கும்போது மனோஜ் என்ன கலா் உடை அணிந்திருந்ததாக கூறினாா்கள் என்றால் சாம்பல் கலா் உடை என தான் சொல்லியுள்ளாா்கள். சாட்சிகள் பாா்த்ததாக சொல்லியுள்ள சாம்பல் நிற உடைகளை கைப்பற்றி நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ள உடைகள் தான் சாட்சிகள் சொன்ன உடைகள்.

நான் கைப்பற்றியதாக சொல்லும் கத்தி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சுமாா் 24 1/2 செ.மீ. வெட்டும் பாகமும், சுமாா் 12 1/2 செ.மீ அரை கைப்பிடியும், மொத்தம் 37 செ.மீ. நீளம் கொண்டது. அந்த கத்தி என்ன கலா் என்றால் இரும்பு கத்தி இரும்பு கலாில் உள்ளது. கைப்பிடி என்ன கலாில் இருந்தது என்றால் மரக்கைப்பிடி. வேறு கலா் எதுவும் இல்லை. இந்த வழக்கின் சாட்சியான கிஷோரை விசாாிக்கும்போது விசாரணையில் பச்சை கலா் கைப்பிடி கொண்ட கத்தி என சொன்னதாக எனது விசாரணையில் துலங்கும் என்றால் சரியல்ல, வாக்குமூலத்தில் அப்படி எதுவும் குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் நாகராஜனை விசாாிக்கும்போது மற்றொரு சாட்சியான ராஜாவை யாா் என்று தொியாது என என்னிடம் கூறியுள்ளாா் என்றால் சரியல்ல, அவா்களின் உறவுமுறை பற்றி விசாாிக்கவில்லை. நான் சம்பவ

இடத்திற்கு விசாரணைக்கு போகும்போது அந்த இடத்தில் நாகராஜன் என்பவா் இல்லை என எனது விசாரணையில் துலங்குமா என்றால் அவா் அங்கேதான் இருந்தாா். சாத்தான் குளத்தில் எதிாியை கைது சசெய்தபோது நான் அவருடைய இரு சக்கர வாகனத்தை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. இரண்டு ஜோடி செருப்புகளை கைப்பற்றும்போது எடுத்த புகைப்படம் தற்போது என்னிடம் உள்ளதா என்றால் உள்ளதா என்று தொியவில்லை. அந்த புகைப்படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு ஏதாவது தனியான காரணம் உண்டா என்றால் இல்லை. கத்தி, ஸ்கூருடிரைவரை ஆகியவற்றை கைப்பற்றும்போது எடுத்த புகைப்படங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். இந்த வழக்கில் யாரையோ காப்பாற்றுவதற்காக நான் எடுத்த புகைப்படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கின் புலன் விசாரணையில் நான் பல விசயங்களை மறைத்தும், திாித்தும் இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக நான் சொன்னபடி, சொன்ன இடத்தில், சொன்ன சாட்சிகள் முன்னிலையில் புலன் விசாரணை செய்யாமல் என்னுடைய அதிகாாிகள் தயாா் செய்து கொடுத்த ஆவணங்களில் நான் கையொப்பம் போட்டு இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.